2024 – மார்ச் மாதம் 05– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 768 / 2018*

*2024 –ம் ஆண்டு மார்ச் மாதம் 05– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 1, , வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. T. R. லட்சுமிதேவி,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 1, ரவிக்குமார் |
| தகப்பனார் பெயர் | : | பஞ்சநாதன் |
| ஊர் | : | திருச்சி |
| வட்டம் | : | திருச்சி |
| மாவட்டம் | : | திருச்சி |
| தொழில் | : | கிளைமேலாளர் |
| வயது | : | 53 |

<u>தேதி: **05.03.2024.**</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் கிளைமேலாளராக பணிபுரிகின்றேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். 1–ம் எதிர்மனுதாரர் வழங்கிய 27.03.2017 –தேதியிட்ட ஆக்சிஸ்பேங்க் காசோலை எண் 012227 ஆகும். அது **எ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. காசோலை பணம் இல்லாமல் திரும்பி வந்ததற்கான கெடாக்மகேந்திரா பேங்க் அனுப்பிய அறிவிப்பு **எ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. 06.04.2017 அன்று 1–வது எதிர்மனுதாரருக்கும், மதுரை வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திற்கும், காசோலை பணம் இல்லாமல் திரும்பி விட்டது என்று எங்கள் நிறுவனத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட அறிவிப்பு **எ.சா.ஆ.3,** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகின்றேன்.

**குறுக்கு விசாரணை:– ( மனுதாரர் தரப்பில்)**

எங்கள் நிறுவனம் வழங்கியது பேக்கேஜ் பாலிசி என்றால் சரிதான். அந்த காப்பீடு பெறுவதற்கு 27.03.2017– தேதியிட்ட காசோலையை 1–வது எதிர்மனுதாரர் கொடுத்திருந்தார். காசோலை திரும்பி விட்டது என்று 1–வது எதிர்மனுதாரருக்கும், வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திற்கும் நாங்கள் அனுப்பிய அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது என்பதற்கு அஞ்சல் ஒப்புகை அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ஆனால் அறிவிப்பு அனுப்பினோம். 06.04.2017 அன்று விபத்து ஏற்பட்டுள்ளது. எ.சா.ஆ.3 அறிவிப்பில் தேதி 06.04.2017 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. 06.04.2017 அன்று நான் சொல்வது போல் அறிவிப்பு அனுப்பி வைத்திருந்தால் அது 1–வது எதிர்மனுதாரருக்கும், வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திற்கும் மறுநாள் கிடைத்திருக்கும் என்றால் சரியல்ல. எ.சா.ஆ.1 காசோலை கமால்பாட்ஷா என்பவர் பெயரில் உள்ளது. காப்பீட்டிற்குண்டான மொத்த பிரிமியத்தொகை ரூ.32,748/– ஆகும். ஒரு காப்பீட்டிற்கு பாதிதொகை ரொக்கமாகவும், பாதி தொகை காசோலையாக வாங்கமாட்டோம் என்றால் வாங்குவோம். 1–வது எதிர்மனுதாரர் முழு தொகையும் செலுத்தி தான் காப்பீடு பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அவர் முழுத்தொகையும் செலுத்தியதால் தான் நாங்கள் காப்பீடு வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. கவர்நோட் தயார் செய்து அதில் காப்பீடு வழங்கிய தேதி, காப்பீட்டு எண், ஏஜென்ட் எண் ஆகியவற்றை குறிப்பிட்டு தான் காப்பீடுவழங்குவோம் என்றால் அந்த நடைமுறை தற்போது பின்பற்றுவதில்லை என்றால் சரிதான். சூரியநாராயணன் என்ற முகவர் தான் முழுத்தொகையும் பெற்றுக்கொண்டு காப்பீடு வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரருக்கும், எ.சா.ஆ.1 காசோலை வழங்கிய நபருக்கும் சம்மந்தம் இல்லையென்றால் சரியல்ல, காசோலை வழங்கியவர் 1–வது எதிர்மனுதாரரின் மகன் ஆவார். 1–வது எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்ட காப்பீடு ரத்து செய்யப்பட்டது என்பதை காண்பிக்க ரத்து செய்யப்பட்ட காப்பீடு நகல் எதையும்

தாக்கல் செய்யவில்லையென்றால் காப்பீடு ரத்து செய்யப்பட்டு விட்டது என்று எ.சா.ஆ.3 கடிதம் அனுப்பியுள்ளோம். காப்பீடு ரத்து செய்யப்பட்து என்பதற்கு முறையான அறிவிப்பு எதுவும் கொடுக்காமல் வேறு ஒரு வழக்கினுடைய ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1–வது எதிர்மனுதாரருக்கும், வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திற்கும் ரத்து செய்யப்பட்டது தொடர்பாக அறிவிப்பு கொடுக்காமல், அறிவிப்பு கொடுத்தது போல் ஆவணம் தயார் செய்து வைத்துள்ளேன் என்றும், மனுதாரர் 3–ம் தரப்பினர் என்றும், அதனால் எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்திற்கும், 1–வது எதிர்மனுதாரருக்கும் ஒப்பந்தம் எதுவும் இல்லையென்பதால் மனுதாரர் 3–ம் தரப்பினர் என்ற கேள்வியே எழவாய்ப்பில்லையென்று சாட்சி கூறுகின்றார். 1–வது எதிர்மனுதாரருக்கும், எங்கள் நிறுவனத்திற்கும் காப்பீட்டு ஒப்பந்தம் நிலுவையில் உள்ளது என்பதால் தான் நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையில் 1–வது எதிர்மனுதாரருக்கு ஆதரவாக நாங்கள் கட்சி எடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு அவர் கேட்டுக்கொண்டபடி எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/–எம். மூர்த்தி,**
**தலைமைக்குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**